விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 24 ஜு: அவ்வல் பிறை: 22 இதழ்: 229

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10-12-1990

## கடமைக்கு உடன் செல்லுமாறு அரச ஊழியர்க்கு புலிகள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழத்திலுள்ள நிர்வாக அமைப்புகள் அனைத்தையும் உடனடியாக இயங்கச்செய்து எமது போராட்டம் வெற்றி பெற சகலஅரச, கூட்டுத்தாபன ஊழியர்களையும் கடமைக்குத்திரும்புமாறு 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(4-ம் பக்கம் பார்க்க)

## இச் சந்தர்ப்பத்திலாவது நாம் உதவவேண்டும்

(யாழ்ப்பாணம்)
தென் தமிழீழத்தில் தமது தாய், தகப்பன், சகோதரர்களை இழந்து உறவுகளைத் தொலைத்துவிட்டு நிற்கும் தமிழ்ச் சகோதரர்களுக்கு உதவ அனைத்து தமிழீழ மக்களும் முன்வரவேண்டும்.
இவ்வாறு இன்று முதல்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு பெரும் ஆதரவு 'றோ' பலத்த அச்சம்

(சென்னை)
தமிழ்நாட்டில் தமிழீழ போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளில் இந்திய புலனாய்வுத்துறை (றோ) தீவிரமாக ஈடுபட்டுவருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## ● கிழக்கு மாகாணத்தில்

# உணவுமருத்துவவசதிகளின்றி அறுபதுதமிழர்பரிதாபமரணம்!

(மட்டக்களப்பு)

**கிழக்கு மாகாணத்தின் ஒதுக்குப்புற கிராமங்களில் உணவு, மருத்துவ அடிப்படை வசதிகளின்றி குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட அறுபது தமிழர்கள் இறந்துள்ளார்கள். மேலும் பலர் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

ஜூன் மாதத்திற்குப்பின் கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து காடுகளில் வாழ்ந்துவரும்லட்சக்கணக்கான மக்கள் மருத்தவ, உணவுதேவை உட்பட அடிப்படை வசதிகளின்றி ஜீவமரணப் போராட்டம் நடத்திவருகிறார்கள்: இவர்களிலேயே இந்த அறுபது பேரும் கடந்த சில மாதங்களில் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

இதேவேளை கிழக்கிலுள்ள தமிழர்கள் இராணுவத்தாலும், முஸ்லிம் ஊர்காவற் படையினராலும், சிங்களக் காடையராலும் தாங்கொணு இன்னல்களுக்கு உள்ளாக்கப் பட்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி)

## உள்நாட்டு யுத்தத்தினல் 15 லட்சம் பேருக்கு வேலையில்லை!

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராவிடில் இலங்கையில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை அடுத்தாண்டு பதினைந்து லட்சமாக அதிகரிக்குமென கொள்கை. திட்டமிடல் செயலாளர் டாக்டர் விமல் விக்கிரமசூரியா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில், தற்போது பத்து லட்சம் பேர் வேலையற்றிருப்

(4ம் பக்கம் பார்க்க)

## லொறிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)
வவுனியா தெற்குப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையான லொறிகள் உணவுப் பொருள்களுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளன. இந்த லொறிகள் பூநகரி ஊடாகவே யாழ்ப்பாணம் வந்தன. (ச)

## தமிழ் பயணிகள் மீது தாக்குதல்; பணம் பறிப்பு

(வவுனியா)
வவுனியா பகுதியில் ஊரடங்கு அமுலிலிருந்தவேளையில் தங்கியிருந்த பல தமிழர் இராணுவத்தால் தாக்கப்பட்டும் பணம் பறிமுதல் செய்யப் பட்டுமுள்ளனர்.

வவுனியாவில் பாடசாலை ஒன்றில் கடந்த 5 நாட்க

(4-ம் பக்கம் பார்க்க)

## உப்பு கூட்டுத்தாபனம் இயங்க மேலிடம் தடை

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் தற்போது இயங்காமல் இருப்பதால் மாதாந்தம் 23 லட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. கூட்டுத்தாபனம் தொடர்ந்து இயங்க அனுமதி

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் சொத்துக்கள் மூதூரில் அழிப்பு

(மூதூர்)
மூதூர்ப் பகுதியில் தமிழருக்குச் சொந்தமான பெருமளவு தேவாலயங்கள், பாடசாலைகள் மற்றும் பெறுமதிவாய்ந்த உடைமைகள் யாவும் முற்று முழுதாகச் சேதமாக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா இராணுவத்தின

(4-ம் பக்கம் பார்க்க)

## தென் தமிழீழ மக்களுக்கு உதவி வழங்கும் நாட்கள்

(யாழ்ப்பாணம்)
இராணுவ நடவடிக்கையினல் பாதிக்கப்பட்டுள்ள தென் தமிழீழ மக்களுக்கு உதவி வழங்கும் நாளாக விடுதலைப்புலிகளினல் பிரகடனம் செய்யப்பட்ட இன்று தொடக்கம் 20ம் திகதி வரையில் உணவாக, உடையாக, பணமாக உதவி வழங்குமாறு தமிழ் மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இன்று தொடக்கம் வீடு வீடாக சென்று உதவிதிரட்டும் தொண்டர்களுக்கு பொதுமக்கள் அனைவரும் உதவுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (ரி)

## மன்னருக்கு வெளியார் செல்ல இராணுவம் தடை விதிக்கிறது

(மன்னர்)
மன்னருக்குள் வெளி இடங்களிலிருந்து செல்பவர்களை சிறிலங்கா இராணுவம் அனுமதிப்பதில்லை எனவும், அங்கிருந்து வெளி இடங்களுக்குச் செல்லமுடியும் என்றும் அங்கிருந்து வருபவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் மன்னரில் இராணுவக் கெடுபிடி அதிகரித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை மன்னரில் நடைபெற்ற தாயாரின் மரணச் சடங்கிற்கு பிள்ளைகள் செல்லமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

மன்னர் மாவட்டத்தில் சின்

(4-ம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேல் மொஸாட் குறித்து அரசு தரப்பினுள் லடாய்

(கொழும்பு)
ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு இஸ்ரேல் மொஸாட் பயிற்சி அளிப்பது குறித்து அரசு தரப்பு முஸ்லிம் எம்.பிக்களுக்கும் அரசுக்குமிடையில் பெரும் கருத்து மோதல் எழுந்துள்ளது.

இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு மூடப்பட்ட பின்பும் மீண்டும் இலங்கையில் பத்து 'மொஸாட்' அதிகாரிகள் கடந்த 5 மாதங்களாக இராணுவத்திற்கு பயிற்சியளித்து வருவதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நேற்றுமுன்

(4ம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை தெரியாமல் பாவனையாளர் குழப்பம்

(யாழ்ப்பாணம்)
பாணின் விலை தெரியாமல் பாவனையாளர்கள் குழப்பமடைந்துள்ளார்கள்.

ஒரே கடையில் ஒரே நேரத்தில் சிலருக்கு 9 ரூபாவாகவும் வேறு சிலருக்கு 10 ரூபாவாகவும் நேற்று பாண் விற்பனை செய்யப்பட்டது. இதனல் பாவனையாளர் குழப்பமடைந்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக அனுமதியில் திருத்தம் கொண்டுவரப்படும்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதியில் புதிய திருத்தங்களை கொண்டு வர உயர்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதற்கான சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய சட்ட மூலத்தின்படி நாடுமுழுவதும் பல்கலைக்கழக அந்தஸ்துடைய கல்லூரிகளை நிறுவி பல்கலைக்கழக அனுமதிகிடைக்காதவர்களும் கல்விபயில வசதி செய்யப்படும். (ச-ரி)

---


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி-4158)

### மலிவு 31 வரை மட்டும்

நீடிக்கப்படமாட்டாது மீரா வெளியீடுகளாக வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள்: 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் நெல்லியடி, ஸ்ரீகாந்தா புத்தகசாலை நல்லூர். (சி 4171)

### வகுப்பு

German Language Classes பட்டப்படிப்புக்களைத்தொடர்வதற்கு உதவும் முகமாக மேற்படி வகுப்புகள் 10-12-90 இல் ஆரம்பமாகின்றன. தொடர்புகொள்க; S. Sornalingam, Secretary, German Cultural Association, 4, Gopal Lane. Vannarponnai. (மனோகரா தியேட்டர் அருகில்) (சி- 4168)

### பரீட்சைகள்

C. I. M. A. Stage 1, A. A. T. Stage 1, I. A. B. All Stages வகுப்புகள் 15-12-90 லும், கொம்பியூட்டர் வகுப்புகள் 12-12-90லும் ஆரம்பமாகின்றன. School of Business Administration, 16 3ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி 4175)


---

## மருந்து தட்டுப்பாடு

[மாங்குளம்]

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மருந்தகங்கள் மருந்துகள் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஒட்டுசுட்டான், மாங்குளம் மருத்துவமனைகளில் தலையிடிக்கான சாதாரண மருந்துகள் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (150-ரி)

---

## பொம்மர் தாக்குதல் மாணவர் வரவு குறைவு

[நெல்லியடி]

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கருகாமையில் அண்மையில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலைத் தொடர்ந்து வமராட்சிப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாகவே காணப்படுகிறது.

---

## மீண்டும் ஆரம்பம்

(நெல்லியடி)

புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியில் இயங்கும் முறைசாராக் கல்விப் பிரிவில் மீண்டும் தட்டச்சு, சுருக்கெழுத்து (தமிழ்) பாடநெறி இன்று 10-ந் திகதி காலை ஆரம்பமாகின்றது.

கல்விநெறியை தொடர்ந்த மாணவர்கள் அனைவரும் மீண்டும் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (55

---

## ஓய்வூதிய அதிகாரிகளும் ஓய்வுபெற விண்ணப்பம்

(கொழும்பு)

ஓய்வூதிய திணைக்களத்தில் நாற்பது பயிற்சிபெற்ற அதிகாரிகள் ஓய்வுபெற விண்ணப்பம் செய்திருப்பதையடுத்து ஓய்வூதிய திணைக்களப்பணிகள் பாதிக்கும்நிலை உருவாகியுள்ளது.

இதனால் ஓய்வூதிய திணைக்களம் பெரும் பிரச்சனையை எதிர்நோக்கவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (ச-ரி)

---

## சர்வோதயம் உதவி

(நாவற்குழி)

கைதடி அரசினர் ஆயுள்வேத போதனா வைத்தியசாலையில் கடமையிலீடுபட்டிருக்கும் தொண்டர்களுக்கு சர்வோதயம் இலவச உணவுப்பொதிகளை அன்பளிப்பாக வழங்கியது.

ஒவ்வொருவருக்கும் 3கிலோ அரிசி, 750 கிராம் சீனி, 100 கிராம் தேயிலை 500 கிராம் நெத்தலி, 1 பைக்கற் நெஸ்பிறே 1 சவுக்காரம், தீப்பெட்டி, 500 கிராம் சோயா பருப்பு என்பன வழங்கப்பட்டதாக பதில் வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் செ. பரமசிவம் பிள்ளை தெரிவித்தார் (107)

---

முல்லைத்தீவில்

## மின்சாரத் தடையினால் தொழிலாளர் பாதிப்பு

(மாங்குளம்)

முல்லைத்தீவில் மின்சாரத் தடை நீடிப்பால் நாளாந்த தொழிலாளிகள் அன்றாட வருமானத்தை இழந்துள்ளனர்.

இப்பகுதியில் பல நாட்களாக மின்சாரத்தடை ஏற்பட்டதையடுத்து அரிசி ஆலைகள், ஐஸ் தொழிற்சாலைகள், சுண்ணாம்புத் தொழிற்சாலைகள், ஓட்டுத் தொழிற்சாலைகள், இயங்க முடியாததால் சுமார் 500 நாளாந்த தொழிலாளர்கள் தமது வருமானத்தை இழந்து பாதிப்படைந்துள்ளனர். (150-ரி)

---

23 குடும்பங்களுக்கு

## பாதிப்பிற்கான உதவி பணம் வழங்கப்பட்டது

(மாங்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு உதவி அரச அதிபர் பிரிவுகளில் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிப்பணம் வழங்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கையால் காயமடைந்த மரணித்த 23 குடும்பங்களுக்கு இப்பணம் வழங்கப்பட்டுள்ளது

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நால்வருக்கும், பூநகரி, பளை, உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒவ்வொருவருக்கும் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதினேழு பேருக்கும்வழங்கப்பட்டுள்ளது. (150-ரி)

---

யாழ். மாவட்டத்தில்

## எண்ணூறு தொண்டர் ஆசிரியருக்கு நியமனம்

(மாங்குளம்)

யாழ்ப்பாணமாவட்ட பாடசாலைகளில் ஜனவரிமுதல் 800 தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

தொண்டர்ஆசிரியரை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்துல் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் 24 ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களில் 50 வீதமானோர் நிரந்தர ஆசிரியர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

நேர்முகப்பரீட்சையின் அடிப்படையிலும், சேவைமூப்பு அடிப்படையிலுமே 50 வீதமானோர் நிரந்தரமாக்கப்படுவர். (105)

---

## "கிறிஸ்தவ வாழ்வு பல சவால்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது"

(யாழ்ப்பாணம்)

''இன்னல்கள் நிறைந்த இந்த வேளையில் உண்மைக் கிறிஸ்தவ வாழ்வு என்பது பல சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. புனித. சவேரியாரின் பாதுகாப்பும், முன்மாதிரியும் எமக்குத் துணையாக என்றும் இருக்கும்.'',

இவ்வாறு யாழ். ஆயர் அதிவந். வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை திருநெல்வேலி புனித. பிரான்சிஸ் சவேரியார் தேவாலய 75-வது ஆலய விழாவுக்கு ஆசிவழங்கிக்குறிப்பிட்டார்.

இத்தேவாலயமே நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரால் 1906-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முதல் தேவாலயம் என்பதும், 1915-ம் ஆண்டு பூசை தொடங்கியது. என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தேவாலய விழாவில் அருட்திரு ஜீவா போல் அடிகளார் திருவுரையாற்றினார். யாழ். மேற்றிராசனச் செயலாளர் அருட்திரு இம்மனுவேல் செல்வராசா அடிகளார் மாலை கூட்டுப் பலிபூசையை நிறைவேற்றினர்.

பங்குத் தந்தை அருட்திரு ச. சகாயதாசன் அடிகளார் ''சுவாமி ஞானப்பிரகாசியார் விதைத்த இவ்விருட்சம் பருத்து ஆக்கிரமிக்கவேண்டுமென்பதல்ல, படர்ந்து பலருக்கும் பயன்படவேண்டும்'' என்று குறிப்பிட்டார். (54)

---

## ராசி பலன்

திங்கட்கிழமை

10-12-1990

நவமி பி. இ. 1-16 வரை: உத்தரம் மு. இ. 3-26 வரை. சித்தயோகம் ராகுகாலம் காலை 7-49 முதல் 9-19 வரை. நல்லநேரம் பகல் 12-10 முதல் 1-46 வரை.

மேடம்: காரியபலிதம், அதிகாரம். குடும்ப மகிழ்ச்சி, தொழில் மேன்மை, உல்லாசப் பயணம்.

இடபம்: மனப்போராட்டம், வேண்டாத பிரச்சனை, கடன்படல், குடும்பப் பிரிவு, அகால போஜனம்.

மிதுனம்: அலைச்சல் மிகுதி, மனைவியால் துன்பம், வைத்தியச்செலவு, தொழில்போட்டி, களைப்பு மிகுதி.

கடகம்: மனச்சந்தோஷம், குடும்பச் சிறப்பு, மனைமாற்றம், தொழில் இலாபம், பாராட்டு.

சிங்கம்: குளப்பம், தொழில் கஷ்டம், குடும்பவேறுபாடு, பயணங்களால் அலைச்சல்.

கன்னி: சகோதர உதவி, பணவரவு, குடும்ப சந்தோஷம், விருந்துபசாரம், கடித உறவு.

துலாம்: வாழ்க்கைப் போராட்டம், சிறுபிணி, தகாத உறவு, அவமதிப்பு, மனச்சுமை.

விருச்சிகம்: மனவேதனை, தொழில் லாபம், குடும்பத்தில் கருத்துமோதல், தயாள குணம்.

தனுசு: அந்நியர் சகாயம், குடும்பத்தில் சுபகாரியம், ஆலய தரிசனம், பொதுப் பணி.

மகரம்: அந்நிய வாசம், குடும்பப் பிரச்சனை, தொழில் கஷ்டம், காரியத்தடை, நண்பருதவி.

கும்பம்: அதிக யோசனை, நோய் வாட்டும், மனதில் விரக்தி பொருளாதாரம் பாதிக்கும்.

மீனம்: எண்ணியது கைகூடும், தொழில்பாராட்டு, புத்திரர் மகிழ்ச்சி, புதிய சிந்தனை, இனசன வருகை.

ஜோஸ்யர்.

---

## திருவருகைக் காலம்

### 2ம் வாரச் சிந்தனை

விருந்தினரை வரவேற்க வீட்டைச் சுத்தம் செய்து ஆயத்தம் செய்வது மனிதப்பண்புகளில் சிறந்த தொன்று. விழாக்கள் வரும்போது வீதிகளைச் செம்மையாக்கி அழகுபடுத்துவது எல்லோருக்கும் உரிய வழக்கம். சமூக வைபவங்களிலும் ஏனைய கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்ளுமுன் நாம் நீராடி, சுத்தம் செய்து நல்ல ஆடைகளை அணிந்து செல்லுகின்றோம்.

ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தம் செய்ய திருமுழுக்கு ஓர் அடையாளமாக எமக்கு அளிக்கப்பட்டது. திருமுழுக்கினால் நாம் மனந்திரும்பி இறை ஆவிக்கேற்ற புதுவாழ்வுக்கு ஆற்றல் பெறுகின்றோம். இந்த ஆற்றல் வளர்ச்சி பெற நாம் தொடர்ந்து பாவவழிகளை நீக்கி ஆன்மீக சுத்திகரிப்பில் ஈடுபடவேண்டும்.

தூய உள்ளங்களில் இறைவன் குடிகொள்கின்றார். தற்பெருமை சுய நலம் வீண்புகழ் ஆகிய துர்க்குணங்களை அகற்றி நற்பண்புகளால் ஆன்மாவை அழகுபடுத்துவோம்.

''ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள் பாழ்வெளியில் நம் கடவுளின் பாதையை செம்மைப்படுத்துங்கள்''

இசையாஸ் 40: 3

அருட்திரு

கே. நிக்கிலஸ்

---

## நிர்வாகிகள்

(மானிப்பாய்)

கைதடி மேற்கு சனசமூக நிலைய நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- சி. சிவானந்தன் உபதலைவர்- வே. தயாளன், செயலாளர்-செ. ஜெயபாலன், உபசெயலாளர் - மு. செபசீலன், பொருளாளர்- ஸ்ரீகுகஞானசோதி, போஷகர்- த. ஆறுமுகம். (71-ரி)

---

## சமய தீட்சை வைபவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் சமயப் பிரவேச தீட்சை வைபவம் இம்மாதம் 30ம் திகதி நடைபெறவுள்ளது

கைதடி வீரகத்திப் பிள்ளையார்ஆலய பிரதமகுரு தீட்சை வைபவத்தை நடாத்தி வைப்பார்.

இவ்வைபவத்தில் 'சமய தீட்சையின் பயன்' என்னும் விடயம் பற்றி திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் உரையாற்றுவார். (ரி)

---

## கட்டிடம் இடிக்கப்பட்டது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரின் உடைந்தநிலையில்காணப்பட்ட மக்கள் சந்தைக் கட்டிடம் முழுமையாக உடைக்கப்பட்டு அகற்றப்பட்டுவிட்டது.

புதிய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை நகரில் புதிய நவீன மக்கள் சந்தை நிர்மாணிக்கப் படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## முடிந்தளவு உதவுங்கள்

"உள்ளவன் கிள்ளியும் கொடான் - இல்லாதவன் இருப்பது அனைத்தையுமே அள்ளிக்கொடுக்கவும் தயங்கான்'' என்பது ஏழை எளியவரின் துயரம் தோய்ந்த வாழ்வில் நிதர்சனமாக கண்டறிந்த உண்மை!

உள்ளவன் யார்? இல்லாதவன் யார் என்று இனம் காண முடியாத அளவுக்கு தமிழினம்முழுவதும் சொல்லொணாத் துன்பக்கடலில் மூழ்கித் தத்தளிப்பது யாருக்குத்தான் தெரியாது!

ஆயினும், உயிரிழந்த குடும்பத்திலும், உயிர் பிழைத்த குடும்பமும், ஊனமுற்றவரிலும், உடல்வலுவுடன் நடமாடித் திரிபவரும், உடமைகளை முற்றாக இழந்தவரிலும், உள்ளவற்றுடன் தப்பிப் பிழைத்தவரும் எவ்வளவோ மேலானவர்கள்.

இந்த வகையில் அம்பாறை அட்டைபள்ளம் வீரமுனை, கல்முனை உட்பட தென்தமிழீழத்தில் எண்ணிறந்த துன்பங்களில் துவண்டு கிடக்கும் எம் உடன்பிறப்புக்களின் நிலை எம்மிலும் படுமோசமானதாகும்!

சிங்கள இராணுவ கெடுபிடிகளுக்கு உட்பட்டு 4000 தமிழர்கள் கொல்லப்பட்டும், 4 லட்சம் பேர் அகதிகளாக விரட்டியடிக்கப்பட்டும் காடுகளிலும், கட்டாந்தரைகளிலும், வானமே கூரையாக வனவிலங்குகளுடன் விலங்குகளுக்கு அஞ்சி நடுங்கி, அஞ்சித் தண்ணிக்கும் வழியின்றி காய்கனி கிழங்குகளை கிண்டி, உண்டு வாழ்வதாக அறியும் போது கண்கள் குளமாகின்றன!

படுகொலைகளுக்கு அஞ்சி மதகுகளில் தஞ்சமடைந்து அதனுள்ளேயே பிஞ்சுக் குழந்தையைப் பிரசவித்து அடைமழையிலும் அண்டி வாழவேறு இடமின்றி தவித்த தமிழ் உடன்பிறப்புக்களின் சோகக் கதைகள் உள்ளம் உருக்குவன!

துப்பாக்கி சூட்டுக்கு உட்பட்டும் இராணுவத்தின் பிடியில் சிக்கிவிடக் கூடாது என்ற மன உறுதியில் நெஞ்சிலே கைக்குண்டைப் புதைத்து மாண்ட வீரத் தமிழ் இளைஞர்களின் தியாக மரணங்கள் கிழக்கிலங்கையில் தினமும் நிகழ்ந்து வருகின்றன.

நாடிழந்து, நகரிழந்து ஊரிழந்து, உற்றார், உறவினர் தொடர்புஅறுந்து வீடு வாசல் வயல்களை விட்டோடி உயிர்பிழைத்தால் போதும் என்று தனித்தும்தப்பிப்பிழைத்தவர்களுடன் சேர்ந்தும் குடும்பத்தில் எஞ்சியவர்களை மட்டும் இழுத்துக் கொண்டோடியும் வந்த அகதிகளின்தொகையோ லட்சத்திலும் லட்சமாகி விட்டது.

நிர்க்கதியான இவர்களுக்கு நிவாரணம் வழங்க சர்வதேச நிறுவனங்களும் தக்கமுறையில் செயற்பட்டதாக தெரியவில்லை.

கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழ்மக்கள் அனைவரையும் விரட்டியடிக்கும் கடும் திட்டம் தான் செயற்பட்டுவரும் அரசிடமிருந்து எத்தகைய மனிதாபிமான உதவியும் கிட்டும்என்று எதிர்பார்ப்பது வெறும் கானல்நீரை நம்பிய கதையாகும்.

எனவே எமது மக்களுக்காகக் கண்கலங்க வேண்டியவர்களும் அவர்களின் வேதனை விழிநீர்களைத் துடைத்துத் துன்பம் தீர்க்கவேண்டியவர்களும் நாமே.

தமிழீழ மக்களே நீங்கள் அள்ளிக் கொடுக்க வேண்டாம். இவர்களுக்கு உரிய பங்கைக் கிள்ளிக் கொடுத்தால் போதும்!

''நீ சிந்தும் துளித் தண்ணீர் எறும்பு குளிக்கும் படித்துறையாகி விடும்'' என்ற கவிஞர் கண்ணதாசனின் தத்துவக் கருத்துக்கு இணங்க முடிந்தளவு உதவிட முன்வாருங்கள். உங்கள் உதவி சிறுதுளி பெருவெள்ளமாகி தென் தமிழீழ மக்களின் கண்ணீர் துளிகளையாவது காயவைக்கத் துணைபுரியட்டும்.

— மயூரன்

---

"வெள்ளையனே வெளியேறு" என்று

# கோஷம் எழுப்பிய முதல் பெண்மணி

# விஜயலட்சுமி பண்டிட்!

'வெள்ளையனே வெளியேறு' என கோஷம் எழுப்பிய முதல் பெண்மணி தனது தொண்ணூறாவது வயதில் இயற்கையெய்திவிட்டார். நேருகுடும்பத்தில் மூத்த தலைவர்கள் அனைவரும் மறைந்தாலும் அவர்களால் உருவாக்கப்பட்ட நவஇந்தியா இன்றும் சமய சார்பற்ற அணிசேராக் கொள்கைகளையே கைக்கொண்டு வருகின்றது.

லச்சி

1932-ம் ஆண்டு பிரிட்டிஷ்ஷார் இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் மக்கள் நல வாழ்வு அமைச்சராக பணிபுரிந்த விஜயலட்சுமிபண்டிட், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கொடுங்கோல் ஆட்சிக்காக பதவியைத்துறந்து காந்தியுடன் இணைந்து நாடுகாக்கும் போராட்டத்தில் இறங்கினார்.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்ட அவர் மூன்று முறை சிறைவாசம் அனுபவித்தார்.

1947-ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றபின்னர், மிகக் கடினமான அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கான தூதுவர்களாகப் பணிபுரிந்து இந்தியாவின் ஒருமைப்பாட்டையும், சமயசார்பற்ற கொள்கைகளையும் உலக தலைவர்களுக்கு எடுத்து விளக்கி இந்தியாவின் புகழை உலக அரங்கில் ஏற்படுத்திய பெருமை அவருக்குண்டு.

இவரது அரசியல் மதிநுட்பத்தையும், ராஜதந்திர திறமையும் மதித்த உலகத் தலைவர்கள் 1953-ம் ஆண்டு ஐ. நா. வின் பொதுச்சபைத் தலைவராகவிஜயலட்சுமி பண்டிட்டையே தெரிவுசெய்தனர். இவர் ஐ. நா.வின் பொதுச் சபைத்தலைவராகப் பணிபுரிந்த காலத்தில் சூயஸ் கால்வாய் பிரச்சனைக்கு தீர்வு காண எடுத்த முயற்சிகள் இவரை 'சமாதானத்தின் காவலர்' என்ற பெருமையை ஏற்படுத்திக்கொடுத்தது. ஐந்து ஆண்டுகள் பதவி வகித்த ஒரே பெண்மணி என்ற பெருமை விஜயலட்சுமி பண்டிட்டுக்கு தான் உண்டு.

1959-ம் ஆண்டு இந்தியா திரும்பிய அவர் மகாராஷ்டிரா கவனராக நியமிக்கப்பட்டார். ஆனால் இவர் இப்பதவியை அதிககாலம்வகிக்காமல் அரசியலில் ஓய்வுபெற்றார்.

பதினைந்து ஆண்டுகள் அமைதியாக வாழ்ந்த விஜயலட்சுமி பண்டிட், அன்னை இந்திரா கடந்த அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியபோது, மருமகளின் அடக்குமுறைக்கு எதிராக அத்தையும் போராட துணிந்துவிட்டதை ஏற்படுத்தி எதிரணிகளுடன் இணைந்து ஜனநாயகத்தைக்காக்கும் போராட்டங்களில் பங்கு கொண்டார்: இதனால் அத்தைக்கும் மருமளுக்கும் நீண்டகாலமாக பனிப்போர் நடந்தது.

**இந்திரா காந்தி**

**அவசரகால**

**நிலைமையை**

**பிரகடனப்**

**படுத்தியபோது**

**எதிரணிகளுடன்**

**சேர்ந்து**

**அதற்கு எதிராகப்**

**போராடினர்**

இந்திராகாந்தி அவசரகால நிலைமையால் பதவிதுறந்து மீண்டும் பொதுத்தேர்தல் மூலம் பதவிக்குவந்ததும் முதலில் வாழ்த்து தெரிவித்தவர் அத்தை விஜயலட்சுமி பண்டிட்தான். வாழ்த்தும்போது 'அரசியலில் நிதானம் வேண்டும். முடிவுகளை பலருடன் ஆலோசித்தே எடுக்கவேண்டும். அப்போதுதான் மக்களின் காவலராக ஆட்சி செய்யமுடியுமென'' நல்லுரை கூறினர்.

விஜயலட்சுமி பண்டிட் தான் நேரு குடும்பத்தில் மருமகளின் ஆட்சியையும் பேரனின் ஆட்சியையும் கண்ணாரக் கண்டு ஆனந்தமடைந்த தலைவர். அவர் இறந்தாலும் அவரால் பங்குகொண்டு உருவாக்கப்பட்ட நவபாரதம் என்றும் உலகமக்களிடையே நல்லுறவை வளர்க்கும். அவருக்குக்கிடைத்த கௌரவம் மகளிர்க்கு உலகில் கிடைத்த கௌரவமாகும். (ச)

---

## "நாம் மாண்டு வீழும்போதும்"

துயரமெனும் இருட்கடலில் மூழ்கியிங்கு
துடிதுடித்து மடிந்திடினும் அடிமையல்லேம்
அயராது கேட்கின்ற ஒலிகள்வேட்டு
அவலத்தின் ஓலங்கள் மரணப்பாட்டு
நியமமிது நகரங்கள் நிதமும் தீயில்
நீறாகிச் சுடுகாடாய் ஒய்ந்திட்டாலும்
புயல்போன்று துயரங்கள் தொடரும்போதும்
புனிதமகள் சுதந்திரத்தாய் பாதம்தொழுவோம்

கல்விதனின் மாண்பறியாக் கசடர்கூட்டம்
கலைக்கூடம் நூலகங்கள் எரித்திட்டாலும்
தொல்லைபல தந்துமக்கள் நிதமுமிங்கே
தொடுவானச் செந்நிறத்தில் குளிக்கும்போதும்
கல்மனத்தோர் கண்மூடி ரசிக்கும் காட்சி
காண்கின்றோம் கருணையெதிர் பார்த்தல்தகுமோ?
இல்லையினி நாம்மாண்டு வீழும்போதும்
இனியதமிழ் வளம்காணக் களத்தில்மாள்வோம்

தானீன்ற மைந்தனையே தேர்க்காலிட்டுத்
தமிழ்மன்னன் மனுச்சோழன் நீதிகண்டான்
வான்பறந்து சுதந்திரமாய் உலவும் புறாவின்
வாழ்வுக்காய்ச் சிபிதன் தசையையீய்ந்தான்
நான்மறைகள் புகன்றதமிழ் நாடுநீதி
நம்முன்னோர் வரலாறு காட்டிநிற்க
ஏனின்று பிறர்கடிமை நிலைமையஃது
எதிர்நின்று எம்முரிமை கொள்வோம் வெல்வோம்.

-நெடுந்தீவு லக்ஸ்மன்

---

"தென்தமிழீழ

# பெற்றோரின் துயர்போக்க அனைவரும் உதவவேண்டும்"

## பாப்பா வேண்டுகோள்

(நாவற்குழி)

''தென் தமிழீழத்திலுள்ள பெற்றோர்கள் கஷ்டத்தை அனுபவிக்க அவர்களின் பிள்ளைகள் இங்கேவந்துஎமது மண்ணைக் காப்பதற்காக போராடுகின்றார்கள். எனவே அந்தப் பெற்றோர்களின் துயர்போக்க நாங்கள் அனைவரும் உதவி செய்யவேண்டும்'' என்று தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு கி. பாப்பா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்தமிழீழ மக்களுக்கான நிதிசேகரிப்பு வைபவத்தை தென்மராட்சியில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

நுணாவில் இலுப்பையடி அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் திரு எஸ். சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு.பாப்பா மேலும் பேசுகையில்; ''இந்த வேளையில் எமது பகுதி இளைஞர்கள் போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும்'' என்றார்.

யாழ் மாவட்ட பிரச்சாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் பேசுகையில் கூறியதாவது: ''இன்று தமிழ் மக்கள் போராட்டத்தைப்பற்றி தெரிந்து கொள்ளாததினாலும் புரிந்து கொள்ளாததினாலும் அன்னியப்பட்டு வருகின்றார்கள் அதனாலேயே நாம் இன்று பல அழிவுகளை எதிர் நோக்கியிருக்கிறோம்''

தென் தமிழீழத்தில் இருக்கும் மக்கள்மாறிக்கட்ட உடையின்றி ஒரு வேளை உணவுகூட இல்லாதநிலையில் எத்தியோப்பிய மக்களின் நிலையிலும் பார்க்க மோசமான நிலையில் பட்டினியால் வேதனையடைகின்றார்கள். இந்நிலையில் அவர்களுக்கு நாம் உதவிகளைச் செய்வதன்மூலம் வடக்கையும், கிழக்கையும் இணைக்கமுடியாது என்ற கருத்தை முறியடித்து ஒரு வரலாற்று முக்கியத்துவத்தையே ஏற்படுத்தலாம்''

(107-ரி)

---

## தமிழீழ விவசாயிகள் குளங்களை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்

(கிளிநொச்சி)

'பண்டைய தமிழ் மன்னர்கள் இயந்திர சாதனங்களின் உதவியின்றிமக்களின்சக்தியை பயன்படுத்தியே குளங்களை நிர்மாணித்தும் புனரமைத்தும் விவசாயத்தை விருத்தி செய்தனர்: இந்தவகையில் தமிழீழ விவசாயிகளும் குளங்களை அபிவிருத்திசெய்ய முன்வரவேண்டும்.''

இவ்வாறு உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் சந்தை மைதானத்தில் இடம்பெற்ற விவசாயிகள் கூட்டத்தில்உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுத் தலைவர் திரு. சிவா மாஸ்டர் குறிப்பிட்டார்.

விவசாய உற்பத்தி குழுத் தலைவர் திரு. தம்பையா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவாமாஸ்டர் மேலும் பேசுகையில்,

''எதற்கும் அரசை நமது மக்கள் எதிர்பார்க்காது சொந்தக் காலில் நின்று முன்னேற்றம் காணவேண்டும். இன்று ஸ்ரீலங்கா அரசு வழங்கும் உணவு ஒருநேரம் தேவைக்கே போதாது. இந்த அரசு கொண்டுவந்த பொருளாதாரத் தடையால் தமிழீழமெங்கும் விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது. விவசாயிகள் மத்தியில் புதிய உற்சாகம் பிறந்துள்ளது'' என்றார். (83)

---

## இலவசக் கல்வி

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் மாகியம்பதி சூரியோதய சனசமூக நிலையத்தினர் தங்கள் பகுதியில் உள்ள வறிய மாணவர்களது கல்வியை மேலோங்கச் செய்யும் நோக்குடன் இலவசக் கல்வி வகுப்புக்களை நடாத்தி வருகின்றனர்.

மேற்கண்ட சனசமூக நிலையத்தினர் கல்வி வளர்ச்சி குறித்து மேற்கொண்டுவரும் பயன் தரும் நடவடிக்கைகளுக்கு இப்பகுதிப் பெற்றோர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள். (139-ரி)

# அஸாமில் இந்திய இராணுவ நடவடிக்கை தோல்வியுற்றது

## தலைவர்கள் தலைமறைவு

(லக்னோ)

அஸாம் மாநிலத்தில் 'உல்பா' தீவிரவாதிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்துள்ளதாக பி: பி: ஸி தெரிவித்தது:

அஸாமில் சட்டம், ஒழுங்கு மிகமோசமாக பாதிக்கப்பட்டதாககூறி அம்மாநிலத்தில் அண்மையில் ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. இதையடுத்து 'அஸாம்' தேசிய விடுதலை முன்னணியான 'உல்பா' தீவிரவாதிகளுடன் இராணுவம் கடும் மோதலில் இறங்கியது.

இதில் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டதாக அரசு கூறியிருந்த போதும் தலைவர்கள் அனைவரும் ஆபத்தின்றி தப்பிவிட்டதாகவும் தீவிரவாதிகள் கெரில்லா தாக்குதலில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# தீவுப் பகுதியில் கடற்படை கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் கடற்படையினரின் கெடுபிடி அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் பெருமளவு கடற்றொழிலாளர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்படையினரின் கெடுபிடியினால் சுருவில், தம்பாட்டி, மெலிஞ்சிமுனை கரையோரப் பகுதிக் கடற்றொழிலாளர் கடலுக்கு செல்வதில்லையென தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதியில் கடற்படையினரின் பீரங்கிப் படகுரோந்து அதிகரித்திருப்பதுடன் பெருமளவு பீரங்கிப் படகுகளும் அப்பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளதாம். (சி)

# வலி. மேற்குப் பகுதியில் திருடர் தொல்லை அதிகரிப்பு

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் தற்போது திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது. இங்குள்ள கடைகள், கோவில்கள், பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள், தனியார் வீடுகளில் எல்லாம் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகிறது:

திருடர் கோஷ்டிகள், பகல் நேரத்தில் இப்பகுதியில் உள்ள சந்திகள், வீதிகளில் கூட்டம் கூட்டமாக நின்று நோட்டமிட்டுச் சென்றபின், நள்ளிரவு நேரங்களிற் சென்று திருடிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது:

இளைஞர்களே கோஷ்டியாகச் சேர்ந்து இத்திருட்டுக்களில் ஈடுபட்டுவருவதாகவும், இவர்களின் தொல்லையால் பொதுமக்கள் பெரும் கஷ்டம் அடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது: (139

### தமிழ்ப் பயணிகள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வாக தங்கியிருந்த சுமார் 2,500 பேர் நேற்று முன்தினம் மாலை அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பாடசாலையில் தங்கியிருந்த 5 நாட்களில் இராணுவத்தினரும் அங்குள்ள தமிழ் குழு ஒன்றும் பலரை கடுமையாக தாக்கியும், பலரிடமிருந்து பணம் பறித்துமுள்ளதாம். (சி)

# புதுக்குடியிருப்பில் வெளிமாவட்டத்தை சேர்ந்த 35,000 அகதி குடும்பங்கள்

(மாங்குளம்)

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 35000 குடும்பங்கள் தங்கியுள்ளன.

இவர்கள் திருகோணமலை உட்பட மற்றும் வெளிமாவட்டங்களிலிருந்து வந்த இவர்கள் இப்பகுதியில் உள்ள பாடசாலைகள் பொதுக்கட்டிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த 5850 பேரும் ஏனைய மாவட்டங்களிலிருந்து 8600 பேரும் இம்மாவட்டத்தில் தங்க வைத்து இவர்களுக்கான நிவாரணங்களை புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. இராசரட்ணம் கவனித்து வருகின்றார்.

### உப்பு கூட்டுத்தாபன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை;

இங்கு வேலை செய்த 350 நிரந்தர ஊழியர்களுக்கும், 300 தற்காலிக ஊழியர்களுக்கும் கடந்த 6 மாதகாலமாக எதுவித வேதனமும் வழங்கப்படவில்லை. ஊழியர்களுக்கு உடனடியாகச் சம்பளம் வழங்கும்படி, வட பிராந்திய உப்புக் கூட்டுத்தாபன முகாமையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை அண்மையில் கொழும்பு சென்று தேசிய உப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. டயஸிடம் வேண்டுகோள் விடுத்தபோது: "அதைத் தம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாதென்றும், வேலை செய்யாதவர்களுக்கு எப்படிச் சம்பளம் வழங்கமுடியும் எனக் கூறி, தமது வேண்டுகோளை உதாசீனம் செய்ததாகவும் கூறினார்;

மூன்று வருடங்களுக்கு தேவையானஉப்பு தற்போதும் ஆனையிறவில் இருப்பில் இருக்கிறது. அந்த உப்பை எடுத்து விநியோகிக்க இராணுவம் இடையூறாக உள்ளது. இதனாலேயே இவ்வருடம் 30 ஆயிரம் தொன் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இராணுவம் அங்கிருந்து விலகுமானால் இந்த குறைபாடுகள் அனைத்தும் எமது ஊழியர்களால் "உடன் நிவர்த்தி செய்ய முடியும்" என்றும் எடுத்துக் கூறியும் அதை கொழும்பு மேலிடம் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டதாம். (வி)

### மன்னாருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னக்கடையில் கடந்த 6ந் திகதி திருமதி பூமணி மெற்றில்டா (வயது 71) என்ற வயோதிபப் பெண் மரணமடைந்தார். எனினும் அவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளமுடியாத நிலை பிள்ளைகளுக்கு ஏற்பட்டது:

### இஸ்ரேல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் பாராளுமன்றத்தில் இதுகுறித்து சபாநாயகர் ஜனாப் எம். எச். முகமட்டுக்கும் அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்னவுக்கு மிடையில் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. (சி)

### பாணின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இது பற்றி கடைக்காரரிடம் விசாரித்தபோது பெரியபாண் 10 ரூபாவென்றும், சிறியபாண் 9 ரூபாவென்றும் தெரிவித்தார்: ஆனால் இரு பாணுக்கும் வித்தியாசம் அவ்வளவாகத் தெரியவில்லை,

300 கிறும் பாணை 9 ரூபாவுக்கும், 350 கிறும் பாணை 10ரூபாவுக்கும் விற்பதாகக் கடைக்காரர் தெரிவித்தார்.

### உள்நாட்டு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பதாகவும், இது அடுத்தாண்டு ஐந்து லட்சத்தால் அதிகரிக்குமெனவும் தெரிவித்தார்.

நாட்டின் வளங்கள் வடக்கு கிழக்கு யுத்தத்திற்கு பெருமளவில் செலவாவதால் தொழில் வாய்ப்புக்களை அரசு உருவாக்க முடியாமல் உள்ளது. இந்நிலையில் அடுத்தாண்டு இலங்கையில் வேலையற்றோர் எண்ணிக்கை பதினைந்து லட்சமாக அதிகரிக்குமெனவும் அவர் கூறினார். (எஸ்-ரி)

# ஓய்வுபெற விண்ணப்பித்த ஆசிரியர் படும்பாடு

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சுமார் 120 பேர் சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறுவதற்கு அவசர அவசரமாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துவிட்டு தற்போது அவற்றைத் திருப்பிப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனராம்,

இத்திட்டத்தின் கீழ் இளைப்பாறினால் அதிக இளைப்பாற்று சம்பளமும் போனஸும் பெறலாமென அங்கலாய்த்து விண்ணப்பங்களை முண்டியடித்துச் சமர்ப்பித்த இவர்களிற் சிலர் தற்போது அந்த விண்ணப்பங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்காக கோட்ட அலுவலகத்திற்கு அலைந்து திரிகின்றனராம்.

இத் திட்டத்தின்படி சுயவிருப்பத்தின்பேரில் இளைப்பாறுபவர்களது இளைப்பாற்றுச் சம்பளம் (பென்சன்)பெற சுமார் இரண்டு வருடகாலம் செல்லுமென்ற வதந்தியை நம்பியவர்களே இப்படித் தமது விண்ணப்பங்களை மீளப்பெற முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (139)

# வடக்கு-கிழக்கு மாவட்டத்தில் 11 லட்சம் பேர் அகதிகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நெருக்கடி நிலைமை நீடித்துவருவதால் அகதிகளின் எண்ணிக்கை 11 லட்சமாக அதிகரித்திருப்பதாக சமூகசேவைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

சமூகசேவைத் திணைக்களம் அண்மையில் எடுத்த புள்ளி விபரப்படி இத்தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதேவேளை வடக்கு-கிழக்கில் உள்ள அகதிகள் முகாம்களில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாது அகதிகள் பெரும் துன்பம் அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### கடமைக்கு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட செயலகம்' வேண்டுகோள்விடுத்துள்ளது.

இது குறித்து அறிக்கை ஒன்றும் வெளியிடப்பபட்டுள்ளது. அவ்வறிக்கையில்;

இன்று தமிழீழத்தில் நடந்துகொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்தின் விளைவாக எம் மக்கள் முன்னெருபோதுமில்லாதவாறு பல வழிகளிலும் பாதிப்படைந்துள்ளார்கள். உயிர், உடமை இழப்புக்களினால் அல்லற்படும் மக்கள் உணவுப் பற்றாக்குறை, சுகாதார வசதிகள் இன்மை, கல்வி பாதிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரம் தடைப்பட்டமை, போக்குவரத்துச் சீர்குலைவு போன்ற குறைபாடுகளினால் மேலும் துன்பத்துக்குள்ளாகிறார்கள்.

சிங்கள பேரினவாத அரசும் அதன் படைகளும் ஏற்கனவே செயல் இன்றியிருக்கும் நிர்வாக அமைப்புக்களை வான்தாக்குதல், ஊரடங்கு உத்தரவு போன்ற நடவடிக்கைகளால் முற்றாகச் செயலிழக்கச் செய்ய முயன்று வருகிறார்கள்.

இந்த முயற்சிகளை முறியடித்து தமிழீழத்திலுள்ள நிர்வாக அமைப்புக்களை இயங்கச்செய்வது எம் அனைவரினதும் தலையாய கடமையாகும். இதுவே எமது போராட்டம் வெற்றியளிப்பதற்கு நாம் செய்யும் உதவியாகவும் அமையும்.

ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள வேளைகளிற்கூடச் சந்தைகள், விற்பனை நிலையங்கள், கூட்டுறவுக் கடைகள் திறக்கப்பட்டு, மக்கள் தங்கள் அன்றாட வேலைகளைச் செய்யப் பழக்கப்பட்டுவரும் இக்காலகட்டத்தில் அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் கடமைக்குச் செலத் தயங்குவதை நியாயப்படுத்த முடியாது.

பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தை முன்னிட்டு வேலைக்குப் போகாத ஊழியர்கள் எந்நேரமும் தங்கள் வீட்டிற்குள் அல்லது பதுங்குகுழிகளுக்குள் இருப்பதில்லை. வெளியில் சென்று தங்கள் அன்றாட வேலைகளைக் கவனித்து வருகிறார்கள். வான்தாக்குதல் நடைபெறும் வேளைகளில் மட்டுமே பதுங்குகுழிக்குள் செல்கிறார்கள். ஆதலால் அலுவலகங்களில் பதுங்குகுழி அமைத்துக்கொண்டால் பணிமனைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யமுடியும்.

எனவே எமது தாயகத்தில் வாழும் மக்களின் அத்தியாவசிய சேவைகளை வழங்கி அவர்களின் இன்னல்களைக் குறைத்து விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க அனைத்து அரச கூட்டுத்தாபன ஊழியர்களும் தத்தமது அலுவலகங்களுக்குச் சென்று கடமையாற்றி உதவவேண்டுமென்று அன்புடன் வேண்டுகின்றோம். (வி)

## வயோதிபர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நோயின் கொடுமை தாங்க முடியாத வயோதிபர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்த சம்பவம் நீர்வேலி - அச்செழு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் நடந்துள்ளது:

அண்ணாமலை (வயது 60) என்னும் நபரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

மேற்படி தற்கொலைச் சம்பவம் வாழைத் தோட்டம் ஒன்றில் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. (க)

### புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கின்றன.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு உள்ள பெருமளவு ஆதரவை நீக்க பல்வேறு வழிகளிலும் 'றோ' முயற்சித்து வருகிறது. இதுபற்றி சில தமிழக சஞ்சிகைகளும் குறிப்பிட்டுள்ளன.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் 'றோ' மீண்டும் முனைப்புடன் தலையிட்டுவருவதாக அண்மையில் தமிழக முதல்வர் குற்றம் சாட்டியதும் தெரிந்ததே: (சி)

## பயிற்சி வகுப்பு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆங்கில பயிலுநர்களுக்கான ஆசிரியர் பயிற்சி வகுப்பு கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டின் கீழ் செல்வி குமாரசாமியினால் நடாத்தப்பட்டுவருகின்றது: (ரி)

### தமிழர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரும், முஸ்லிம் ஊர்காவடு படையினரும் சேர்ந்து மேற்படி அழிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

படையினரின் அழிப்பு நடவடிக்கைகளால் இப்பகுதித் தமிழ்மக்கள் பெரிதும் இன்னலுறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது: (க)

### இச்சந்தர்ப்ப...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

20-ம் திகதிவரை தென் தமிழீழ மக்களுக்கு உதவி வழங்கும் நாட்களாக விடுதலைப்புலிகள் பிரகடனப்படுத்தியதையொட்டி மகளிர் முன்னணி கோரியுள்ளது.

சகல வழிகளிலும் அங்கு அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படைத் தேவையை உணர்ந்து, நாம் இச்சந்தர்ப்பத்திலாவது அவர்களுக்கு உதவி, எமது பங்களிப்பை நிறைவேற்றுவதன் மூலம் எமது பிரதேசத்திற்கு உதவலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (வி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.